(ஈ) புயல்-மழை குறித்து கொடுக்கப்பட்ட ஒத்திவைப்புத் தீர்மானங்கள் குறித்து.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இன்னும் ஒரு அறிவிப்பு. டாக்டர் ஹாண்டே அவர்கள் 42-வது விதியின் கீழ் புயல்-மழை குறித்து ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் 6—12—1972 அன்று கொடுத்தார்கள். தமிழ்நாட்டில் பல பகுதிகளில் நடந்த நிகழ்ச்சிகள் குறித்தும், போலீஸ் துப்பாக்கிச் சூடு குறித்தும் பல ஒத்திவைப்புத் தீர்மானங்கள் வந்திருந்தன. அமைச்சரவை மீது நம்பிக்கை தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம் நடைபெறுவதால் அந்த ஒத்திவைப்புத் தீர்மானங்களை தள்ளுபடி செய்து அனுப்பியபோது தவறுதலாக இந்தத் தீர்மானமும் சென்றுவிட்டதால், அதை எடுத்துக் கொள்ளவில்லை. இனிமேல் இவ்விதம் நடைபெறாமல் இருக்க சம்பந்தப்பட்டவர்கள் எச்சரிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரவையின் நிகழ்ச்சிகள் இன்று இத்துடன் முடிவடைகின்றன. மீண்டும் நாளை காலை 9 மணியளவில் பேரவை கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.48-க்கு ஒத்திவைக்கப்பட்டது.

(7) பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் :

A. *Statutory Rules and Orders*

35. Notification issued with G.O. Ms. No. 1357, Rural Development and Local Administration, dated the 3rd July 1972 in regard to extension of term of office of the members of the Tamil Nadu Khadi and Village Industries Board for a further period of one month from 3rd July 1972. [Laid on the Table of the House under section 29 (3) of the Tamil Nadu Khadi and Village Industries Board Act, 1959 (Tamil Nadu Act 18 of 1959).]

36. Notification issued with G.O. Ms. No. 2335, Agriculture, dated the 7th September 1972, in regard to declaration of notified market area of the Lalgudi market for the purpose of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 in respect of paddy and Gingelly. [Laid on the Table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]